அ.கு.எண்: 04

நாள்: 05.01.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 5.1.2013

காவேரியில் தமிழகத்திற்குரிய உரிமையை நிலை நாட்டுவதற்காகவும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்வதற்காகவும் உச்ச நீதிமன்றம் வரை சென்று பல்வேறு ஆக்கப்பூர்வமான, முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதன் காரணமாக, ஒரு சொட்டு தண்ணீரைக் கூட திறந்துவிட முடியாது என கர்நாடகா மறுத்து வந்த சூழ்நிலையில், 47 டி.எம்.சி. அடி தண்ணீரை தமிழகம் பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு 31.12.2012–க்குள் மத்திய அரசிதழில் வெளியிடப்படும் என்று காவேரி கண்காணிப்புக் குழு முடிவு எடுத்து, அந்த முடிவு உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது என்பதையும், அதனை உச்ச நீதிமன்றம் பதிவு செய்து கொண்டது என்பதையும் தமிழக விவசாயிகள் நன்கு அறிவார்கள்.

இருப்பினும், இடர்ப்பாடு பங்கீட்டு முறையின்படி தமிழகத்திற்குத் தர வேண்டிய காவேரி நீரினை கர்நாடகம் திறந்துவிட மறுப்பதோடு மட்டுமல்லாமல், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடவும் கர்நாடகம் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் தலைமையிலான அரசு மறுத்து வருகிறது. தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியின் நடவடிக்கைகளும் மத்திய அரசின் முடிவிற்கு ஆதரவினை தெரிவிப்பது போலவே அமைந்துள்ளன.

தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் சுயநலப் போக்கினையும், கர்நாடகத்தின் பிடிவாதப் போக்கினையும் எதிர்த்து, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிட மத்திய அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று 4.1.2013 அன்று தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் விசாரணையின் போது முறையிடப்பட்டது. சம்பா பயிரினைக் காப்பாற்றுவதற்குத் தேவையான 18 டி.எம்.சி. அடி தண்ணீரை திறந்து விடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே மனுத் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. இந்த மனுவினை 4.1.2013 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், கர்நாடகம் தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டிய தண்ணீர் குறித்து காவேரி கண்காணிப்புக் குழு 11.1.2013–க்குள் கூடி முடிவு எடுக்க வேண்டும் என்றும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடுவது குறித்து 31.1.2013–க்குள் மத்திய அரசு முடிவு எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்டதன் காரணமாகவும், இடர்ப்பாடு பங்கீட்டு முறையின்படி கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடாததன் காரணமாகவும், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதில் தாமதம் ஏற்பட்டதோடு மட்டுமல்லாமல், முன்னதாகவே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதும் நிறுத்தப்பட்டதால் 11 லட்சம் ஏக்கர் பரப்பில் காவேரி டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்ட சம்பா / தாளடி நெற்பயிர்களின் கடைமடைப் பகுதிகளில் உள்ள பயிர்கள், தண்ணீர் இல்லாமை காரணமாக பாதிப்படையும் நிலையில் உள்ளன.

டெல்டா விவசாயிகளின் துயரினைத் துடைக்கும் பொருட்டு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழும், மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழும் ஏக்கர் ஒன்றுக்கு 13,692 ரூபாய் வரை நிவாரணம் வழங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன்.

தற்போது, விவசாயிகளுக்கு மேலும் அளிக்க வேண்டிய நிவாரணம் குறித்து ஆராய, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் ஆகியோரை உறுப்பினர்களாகவும், நிவாரண ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரை உறுப்பினர் செயலராகவும், தொடர்புடைய செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களை அலுவல் உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் உயர் மட்டக் குழு அமைக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த உயர் மட்டக் குழு, வறட்சி நிலைமை மற்றும் பயிரிழப்பு குறித்து ஆய்வு செய்து எந்தெந்த வட்டங்கள் / ஒன்றியங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்று மாநில அரசுக்கு பரிந்துரை செய்யும். இதன் அடிப்படையில், வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு தக்க நிவாரணம் உரிய நேரத்தில் வழங்கப்படும். விவசாயிகள் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகாத வகையில் நியாயமான முறையில் நிவாரணம் வழங்கப்படுவதை எனது தலைமையிலான அரசு உறுதி செய்யும்.

பயிரிழப்பினால் வாழ்வாதாரம் பாதிப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஏற்பட்டுள்ளதை ஈடு செய்யும் பொருட்டும், விவசாயிகள் தண்ணீரினை திறம்பட சேமித்து கையாளும் வண்ணமும், நீர் நிலைகளைத் தூர்வாருதல், ஆறுகள் மற்றும் வாய்க்கால்களை சுத்தம் செய்தல் என பெரிய அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் சிறப்புப் பணிகளாக எடுக்கப்படும்.

இது மட்டுமல்லாமல், மோசமான பருவநிலையைக் கருத்தில் கொண்டு, தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகைக்காக அரிசி பெறும் சுமார் 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 160 ரூபாய் மதிப்பிலான சிறப்புப் பொங்கல் பரிசு தொகுப்பு ஒன்று அளிக்கப்படும். இந்தத் தொகுப்பில், 20 ரூபாய் மதிப்பிலான 1 கிலோ பச்சரிசி, 40 ரூபாய் மதிப்பிலான 1 கிலோ சர்க்கரை மற்றும் பொங்கல் பண்டிகைக்கான இதர பொருட்கள் வாங்குவதற்காக 100 ரூபாய் ரொக்கம் ஆகியவை அடங்கும். இந்தத் தொகுப்பு அந்தந்த நியாய விலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். இதனால் அரசுக்கு கூடுதலாக 300 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்படி அறிவிப்புகள், விவசாயிகளின் துயர் துடைக்க வழி வகுப்பதோடு மட்டுமல்லாமல், பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அனைவருக்கும் எனது பொங்கல் திருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை